முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1190

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.01.2023, ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்கார சொரூபமே அரங்கா
ஓங்கார சூட்சுமமே தேசிகா
ஓங்காரக்குடில் படைத்து அருளுகின்ற
ஓங்காரன் என் அவதாரமே ஆறுமுக அரங்கா
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஆங்கில வருடபிறப்பு நன்னாளில்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 17 ம் நாள் 01.01.2023, ஞாயிற்றுக்கிழமை)
வகையென ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் அரங்கனுக்கு ஆற்றல்பெருக
3. மிகைபட அரங்கன் தர்மத்தாலும்
மேலான அரங்கன் சன்மார்க்கத்தாலும்
ஜெகமெங்கும் ஞானவான்கள் படை பெருகி
செப்பிடுவேன் ஞான ஆட்சி உதயமாகும்
4. ஆகவே அரங்கனை நோக்கி உலகோர்
அவசியம் அணுகி ஞான தீட்சை பெற்று
மகிழவே அரங்கன் தர்மத்தை ஏற்று
மண்ணுலகமெல்லாம் பரப்பி வருதல் காண
5. காணவே அதுவே ஞானமாகும்
கருணையோடு எந்தன்
காட்சியாக உலகமெங்கும்
தானாக சரவண ஜோதி வழியும்
6. தவபலமாக அரங்கன் ஆசி வழியும்
வழிதனில் உலகோரை அணுகி இனிதே
வல்லமைபட அரங்கன் அவதார நோக்கமான
வையகத்தில் ஞான ஆட்சி மலரக்கூடும்
7. கூடவே ஞானியர்கள் படை கூடி
குரு அரங்கன் துணையோடு இந்த மாற்றத்தை
நாடெங்கிலும் அற்புதம் நடத்தும் வண்ணம்
ஞானமாக மக்களுக்கு அருளிவர
8. வருகவே அரங்கனை அணுகஅணுக
வையகம் ஞான ஆட்சியை கண்டு மகிழும்
தருகின்ற அரங்கன் குணத்தின் வழி
தர்மலோகமாகி இந்த பேருலகமே
9. உலகமே அரங்கனால் பாதுகாக்கப்படும்
உயர்வான தொண்டர்களைக் கொண்டு
ஞான ஆட்சி அகிலமெங்கும் மலரக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—